குறள் நெறியே நம்நெறி.

# குறள் மலர்

விசுவாவசு; புரட்டாசி-ஐப்பசி இணைப்பிதழ்.

# திருக்குறள்

## அறத்துப்பால்

## 6

## இல்லற இயல்.

## வாழ்க்கைத் துணைநலம்

மாலை-1 மலர்-6

கோலார் தங்கவயல்
இராபர்ட்சன்பேட்டை
(மைசூர் மாநிலம்)

பதிப்பாசிரியர்:
அ. இரத்தினசபாபதி

# மலரைப்பற்றி.

(சென்ற ஐந்தாவது மலரின் தொடர்ச்சி)

22. "....குறள் மலர் மேலும் சிறப்புற்று ஓங்கி வளர்ச்சியுறவும், தமிழகம் முழுதும் பரவவும், தமிழக நூலகங்களில் இடம் பெறவும் ஆண்டவன் அருள்வானாக."

தமிழ்க்கடல். திரு. ராய-சொக்கலிங்கம் அவர்கள்
இயக்குநர்; தமிழ் ஆராய்ச்சித்துறை,
அழகப்பா கல்லூரி, காரைக்குடி.

23. "குறள்மலர் பெற்றேன். முயற்சி நன்ருக உள்ளது. தங்கள் ஊக்கத்தையும் உழைப்பையும் போற்றுகிறேன். திருக்குறள் இணையற்ற நூல்; மறைந்த சான்ருேர் ஆல்பர்ட் ஸ்வைட்சர் முதலானேரின் உள்ளம் கவர்ந்த உயரிய நூல் ஆதலின், அதன் புகழ் பரப்பும் 'குறள் மலர்' வாழ்க.

டாக்டர், மு. வரதராசனுர் எம். ஏ; எம். ஓ. எல். பி. எச். டி அவர்கள்
சென்னை

24. "அரும்பாக இருந்த குற்ட்கருத்து போதாக வளர்ந்து இன்று மலராக விரிந்து அங்கிங்கு எனுதபடி எங்கும் மணம் பரப்புகின்றது. அம்மணம் கற்ருரோடு மட்டும் நின்று விடாமல் மற்ருேர்க்கும் பயன்படும் வகையில் நன்கு அமைந்துள்ளது 'குறள் மலர்.' குறள் மலர் அறிவு ஒளியும் பண்பு மணமும் எங்கும் பரப்பி சிறந்தோங்கி வளர நான் அகங்குளிர வாழ்த்துகின்றேன்."

திரு. வ. பெருமாள் எம். ஏ; பி. டி. எம். ஆர்; ஏ. எஸ்; அவர்கள்
தமிழ்ப் பேராசிரியர், தங்கவயல்.

25. "திருக்குறளை மக்கள் அறியுமாறு தாங்கள் செய்துவரும் பணி மிகவும் போற்றத் தக்கது. ஒவ்வொரு குறளுக்கும் ஒவ்வோர் ஆசிரியர் உரையெழுதுமாறு செய்வதால், தமிழ் அன்பர்கள் பலரும் தங்கள் கருத்துக்களை வெளியிடுதற்கு இஃதோர் சிறந்த வாய்ப்பாய் அமைகிறது. திருக்குறளை மக்கள் புதியதோர் முறையில் புதிய ஊக்கத்துடன் படித்து மகிழ்தற்குக் 'குறள் மலர்' பெரிதும் உதவி புரிகிறது"

திருமதி. மேரி மாசில்லாமணி அம்மையார்,
எம். ஏ; எல். டி. அவர்கள்

# குறள்மலர்

திருக்குறள் விளக்கம்.

| மாலை-1 | விசுவாவசு; புரட்டாசி-ஐப்பசி | மலர்-6 |
|---|---|---|


## 6. வாழ்க்கைத்துணை நலம்.

1. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. (51)

2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித்து ஆயினும் இல். (52)

3. இல்லதென் இல்லவள் மாண்பானால்? உள்ளதுஎன்
இல்லவள் மாணாக் கடை? (53)

4. பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்புஎன்னும்
திண்மைஉண் டாகப் பெறின். (54)

5. தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதுஎழுவாள்
'பெய்' எனப் பெய்யும் மழை. (55)

6. தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண். (56)

7. சிறைகாக்கும் காப்பெவன் செய்யும்? மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை. (57)

8. பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு. (58)

9. புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை. (59)

10. மங்கலம் என்ப மனைமாட்சி; மற்று அதன்
நன்கலம் நன்மக்கட் பேறு. (60)

ஆசிரியர் குறிப்பு:

# வாழ்க்கைத் துணை நலம்.

இல்லறமே நல்லறம் என்று முன்னர் கூறிய வள்ளுவர் பெருமான், அவ்வில்லறத்தை நல்லறமாய் நடத்தற்கு ஒருவனது மனைவி-எவ்வாறு இருக்கவேண்டும், என்பதை இவ்வதிகாரப்பாக்களில் கூறுகின்றார்.

பெண்; யாரைப் 'பெண்'-அல்லது ஒருவனின் 'மனைவி' என்று கூறத்தகும் என்பது கேள்வி. தன் கற்பையும், கணவனையும், தகுதியமைந்த புகழையும் காப்பாற்றுபவளே பெண் என்பது குறள் தரும் விடை;

> "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்"

என்பது (இவ்வதிகாரத்தின் ஆறாவது) குறள்.

இனி, இல்லறத்தை நல்லறமாய் நடத்த ஒருவனுக்கு ஒரு பெண், மனைவியாக வேண்டும். மடக்கொடி இல்லாமனை பாழ்அன்றோ? மனைவி, கணவனது வாழ்க்கையில் துணைவியாவாள். ஆனால், துணைவி என்பவள் எப்படிப்பட்டவளாக இருத்தல் வேண்டும்? இவ்வினாவிற்கு, இவ்வதிகாரத்தில் எடுத்த எடுப்பிலேயே, விடை கிடைத்துவிடுகிறது.

> "மனைத்தக்க மாண்புடை யவள் ஆகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்பது முதற்குறள். இல்லறத்திற்குத்தக்க நற்குணம், நற்செய்கையுடன் கணவனின் வரவுக்குத்தக்க வாழ்க்கை நடத்துபவளே வாழ்க்கைத் துணைவி எனத்தக்கவள் என்பது இக்குறளின் கருத்து.

கனவு உலகில் கற்பனைச் சிறகடித்துத் திரிபவரல்ல குறள்யாத்த கோமான். கண்ணுக்குக் கண்ணாக, நேருக்கு நேராக அனுபவத்தில் நல்வாழ்க்கை காண வழிவகுத்த பெருமகனாவார் அவர். குடும்பத்தின் பொருளாதாரம் சீரழியின் அதன்பின் இல்லறம் நல்லறமாயிலங்குவது முயற்கொம்பே. இனிதே இல்லறம் நடத்தப் பொருள்வேண்டும். ஆனால், எவ்வளவு பொருள் வேண்டும் என்பது வினா. இதற்கு விடையாக வள்ளுவர் கூறுவதென்ன? அப்பனே! உன் பொருள் வருவாய் பெரிதாகவேனும் இருக்கட்டும்; அன்றிச் சிறிதாக வேனும் இருக்கட்டும்; அது முக்கியமன்று; ஆயின், வேறெது முக்கியம்? உனக்கு வாய்க்கும் மனைவி வளத்தக்காளாக(வரவு அறிந்து அதற்கு ஏற்றபடி இல்லறம் நடத்துபவளாக) இருக்க வேண்டும். இதுதான் முக்கியம் என்பது வள்ளுவர் தரும் விளக்கம்.

மனைவியின் இயல்பை உடன்பாட்டு முறையிலும், எதிர் முறையிலும், இவ்விரண்டையும் ஒரே குறளில்-ஏழே சொற்களிலும் அமைத்து ஆசிரியர் கூறும் சிறப்பினை,

> "இல்லதுஎன் இல்லவள் மாண்பானால்? உள்ளது என்
> இல்லாள் மாணாக் கடை?

[illegible] வினவும் மூன்றாவது குறளில் காண்கின்றோம்.

இல்லக்கிழத்தி மாண்புடையவளாக இருந்துவிட்டால் அங்கே இல்லை என்று சொல்வதற்கு எதுவுமே இருக்காது; எல்லாம் உண்டு. அவ்வாறன்றி மனைவி மாறுடையவளாக அமையின், அங்கு வேறு எவ்வளவுதான் சிறப்புக்கள் இருப்பினும் வாழ்வு சிறக்காது; அங்கே ஒன்றுமே இல்லை என்றுதான் ஆகும். எத்துணைச் சொற் சுருக்கத்தில், ஆனால், எத்துணைக் கருத்தாழத்தைக் காட்டி விடுகிறார் ஆசிரியர்.

மற்றொன்றும் இங்கே காண்போம்-ஒருவனது இல்வாழ்க்கைக்கு மட்டிலுந்தானு மனைவி துணையாகின்ருள்?-"அவ்வாறு நான் எங்கே சொன்னேன்?" என்கிருர் வள்ளுவர். பெண்ணை "இல்லறத் துணை" என்ரு ஆசிரியர் கூறினுர்? இல்லையே! "வாழ்க்கைத் துணை" என்றன்ரோ கூறினுர்? ஒருவன் இனிதே இல்லறம் நடாத்தி-வானப்பிரத்தஞகலாம். பின்னர் (உள்ளத்தே துறந்த) துறவியாகலாம். எனினும், அவன் இவ்வுலகில் வாழுமட்டும் அவள் அவனது துணைவியே இதனுல்தான், வாழ்க்கைத் துணை என்ருர். துறவு என்ருல், உடனே காட்டிற்கு ஓடிக் கந்தமூலம் புசித்துக் கண்மூடி மௌனியாகிவிடத்தான் வேண்டுமென்பதில்லையே? உள்ளத்தில் துறந்தோர் உள்ளத்தே ஈசனைக் காணலாமே? அவ்வாறு கண்டவர்களும், 'அன்பர் பணிசெய்ய வென்னை ஆளாக்கி விட்டுவிடு" என்றுதானே ஈசனை வேண்டினர்?

இராமகிருட்டினர் துறவிதானே? அவர் வாழ்வில், அவரது துணைவியாரான சாரதாமணி அம்மையார் இடம்பெற்றிருக்கவில்லையா? அவரது துறவிற்கும் அவர் துணை நின்றிலங்கவில்லையா?

அதனுல்தான் வள்ளுவர் கூறினுர் கற்பண்புடைய பெண்ணே ஒருவனின் வாழ்க்கைத் துணை என்று.

நன்றி.

இவ்வதிகாரப்பாக்கள் அனைத்தும் இல்லாள் நல்லாளாய் இருப்பதன் சிறப்பையும், அஃதின்றேல் வரும் இழிவையும் கூறுகின்றமையின், பெண்டிரே இப்பாக்கள் அத்தனைக்கும் உரை தருவது சிறப்பாயமையும் எனக் கருதினேம். மற்றும், இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டுத் தோன்றிய குறளினுக்கு இக்காலத்தின் படித்த மகளிர் எவ்வாறு உரை தருவர் எனப் பலரும் காண விரும்பினேம். அதன் படியே, இவ்வதிகாரத்தின் பத்துக்குறட்பாக்களும் கல்வித்துறைபோய பத்துப் பெண்பாற் புலவர்கள் நல்லுரை தந்தருளியுள்ளனர். ஆழ்ந்த கருத்தமைத்தும் எழுதியுள்ளனர். அவர்கள் அனைவர்க்கும் எமது நன்றி உரித்தாகின்றது.

# மனைத்தக்க மாண்புடையாள்...

திருமதி, மோகூர்; வாசுகி எம். ஏ., எம். லிட்.
தமிழ் விரிவுரையாளர்,
தில்லிப் பல்கலைக் கழக மகளிர் கல்லூரி.
தில்லி-7.

குறள்-1. "மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை. 51

கருத்துரை:- இல்லற வாழ்க்கைக்கு உரிய மாண்பு (நற்குண நற்செயல்கள்) உடையவளாய்த் தன்னை மனைவியாகக் கொண்ட கணவனுடைய வருவாய்க்குத் தக்கவாறு வாழ்க்கையை நடத்துபவள் அந்த இல்வாழ்க்கைக்கு ஏற்ற துணையாவாள்.

மாண்பு என்பது பண்பையும், தொழிலையும் உணர்த்தும் ஓர் அருஞ்சொல்லாகும். அழகு, பெருமை, மாட்சிமை, நன்மை, உயர்வு, திற முணர்த்தும் தொழில் போன்ற பல பொருட்களைக் குறிக்க இக்காலத்தில் "மாண்பு" என்ற சொல் பயன்படுகிறது. இவற்றையும், பிறவற்றையும் அடக்கி 'நற்குண நற்செயல்கள்' எனப் பரிமேலழகர் ஆராய்ந்துரைக்க, மாண்பு என்ற மணிபோன்ற சொல்லைப் பொறுக்கிப் பொன்னுன குறளில் சிறப்பாக அமைத்துள்ள நம் பொய்யில் புலவருடைய பெருமையை நாம் எவ்வாறு அளவிட்டுக் கூறமுடியும்?

மனைவிக்கு உரிய நற்குணங்களாவன; துறந்தாரை விரும்பி வரவேற்று உணவு முதலியன தரும் விழைவுடைமையும், விருந்தயரும் விருப்பமுடைமையும், வறியரிடத்து அருளுடைமையும் முதலாயினவாம் நற்செய்கைகளாவன; வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்களை அறிந்து தொகுத்து வைத்தலும் சமையல் தொழில் வல்லமையும், உலக நடையை அறிந்து நடத்தலும் முதலாயின. வருவாய்க்குத்தக்கவாறு வாழ்க்கையை நடத்தலாவது; வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்து வாழ்க்கையை நடத்துதல் ஆகும்.

கோவலனைப் பிரிந்த கண்ணகி, அவன் பிரிவைக் குறித்துக் கூடப் பெருந்துயர் உறவில்லை. ஆனல், "அறவோர்க்களித்தலும், அந்தணர் ஓம்பலும், துறவோர்க்கெதிர்தலும், தொல்லோர் சிறப்பின் விருந்தெதிர் கோடலும்" இழந்ததற்காகவே பெரிதும் துயர் உற்ருள் என்ருல், அவளுடைய மாண்புடைமை பிறப்பிலேயே அவள் பெற்ற பெருந்திருவாம் எனப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளோம்.

நற்குண நற்செயல்களால் கணவன் உவக்கத் தானும் உவகையுற்று வாழலாம். ஆனல், வருவாய்க்கு ஏற்பச் செலவு செய்து வாழத் தெரியாத மனைவி கணவனையும் இன்புறுத்த முடியாது; தானும் இன்பம் உற முடியாது; வறுமையும், பூசலும், பிணக்கும், பிணியும் நிலை பெறும் நரக வேதனையே வாழ்க்கை முழுதும் அமைய நேரும்.

செல்வர்கள் வளமாக வாழும்போது செய்கின்ற அறச்செயலைக் காட்டிலும், வறுமையில் செம்மையான பண்புடன் அறத்தை மேற்

(தொடர்ச்சி அடுத்த பக்கத்தில்)

(இதழ் ஒன்றின் தொடர்ச்சி)

கொண்டு வாழ்கின்றவர்களே பாராட்டுதற்குரியராவர். பெரிய புராணத்தில், குங்கிலியக்கலய நாயனர் செல்வராக இருந்து வறியராகி இறைவனுக்குத் தூபம் இடுவதற்குக் குங்கிலியம் வாங்கப் பணம் இல்லையே என்று ஏங்கிய நேரத்தில், பெண்கள் கற்பனையாகவும் நெஞ்சில் நினைக்க நடுங்கும்படியான செயலை அந்நாயனரின் மனைக்கிழத்தி செய்ததை ஈண்டு நாம் நினைவு கூறலாம். ஈதற்கரிய இழை (அணி) யாகிய மங்கலச் சின்னத்தைக் கொடுத்து "இதை விற்று எம்பெருமானுக்குக் குங்கிலியம் வாங்கித் தூபம் இடுங்கள்," என்று அம்மங்கையர் திலகம் கூறியதை நினைக்கும்போது திருவள்ளுவர் கூற்றுக்கும் ஒருபடி உயர்ந்து அவ்வம்மை சென்றுவிட்ட நிலையை நாம், "கொண்டான் வளத்தக்காள் வாழ்க்கைத்துணை" என்று மட்டும் கூறினர் வள்ளுவர்; கொண்டான் வருவாய் இன்றி நிலை குலைந்தபோது வருவாய் தந்த அணங்கல்லவா அவள்! என்று நன்குணர்ந்து இறும்பூது எய்துகிறோம் அல்லவோ?

இல்லற மனிருக்குத்தான் எத்தகைய ஆற்றலும், அன்பும், கடமையுணர்வும் செயலும் தேவைப்படுகின்றன!

கண்ணகியும், பெரிய புராணப் பெண்மணிகளும் பழங்காலத்தைச் சேர்ந்தவர்கள்; ஆகவே, அவர்களெல்லாம் புராணக் கதைக்கு உரியவர்கள் என்று சிலர் எண்ணலாம். ஆனல், அண்மையில், ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மனைவியாய் வாழ்ந்த சாரதா தேவியாருடைய வாழ்க்கையில் நடந்த ஒரு செயல் தற்காலப் பெண்மணிகட்கெல்லாம் கலங்கரை விளக்கமாகக் கொள்ளுவதற்கு உரியதாகும்;

ஸ்ரீ ராமகிருஷ்ணர் விருப்பப்படி விருந்தினரைப் பேணும் நற்பண்புடையவரே சாரதா தேவியார். அவர்களுடைய வாழ்க்கை செல்வம் நிரம்பிய வாழ்க்கையன்று ஒரு நாள், ஒரு விருந்தினர் நள்ளிருள் நேரத்தில் ஸ்ரீ ராமகிருஷ்ணரை நாடி வந்தார். விருந்தினரைப் பேணும் நோக்கத்துடன் அவர் தம் மனைவியாரைப் பார்க்க, அந்த அம்மையார் தாம் வைத்திருந்த கோசுக் கீரையின் புறவிதழ்களைக்கொண்டே பலவகைக் கறிகள் செய்து விருந்தினர் மகிழ உணவளித்தார் என்பர்.

இத்தகைய மங்கையரை மனைவியராகப் பெறுவதற்குக் கணவன்மார் மாதவம் செய்தவராகத்தான் இருக்க வேண்டும்; சிறப்பாக இக்காலத்தில் எனலாம். வள்ளுவர் வழிநின்று நற்குண நற்செயல்களும், வளத்தக்க வாழ்வும் எல்லா மங்கையர்களும் பெற்றிலங்குவார்களானல், இந்நிலவுலகமே சுவர்க்கலோகமாய் விடும். எனவே, வள்ளுவர் கூறிய வழியில் மங்கையர் அனைவரும் நிற்பாராக! வாழ்க வள்ளுவம்! வாழ்க வள்ளுவர் வழி மகளிர்! *

---

(இதழ் மூன்றின் தொடர்ச்சி)

இந்த நுட்பத்தினைக் கண்ட வள்ளுவர் ஒரு வரையறை கூறும் முறையில்,

மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல்."

என்கின்ருர்.

இந்த மனைமாட்சியையும், அம்மாட்சியில் வாழ்ந்தான் வாழ்க்கையினையும் புறநானூற்றில்,

"யாண்டுபலவாக நரையிலவாகுதல் .." என்ற செய்யுள் கொண்டறியலாம். *

# மனைமாட்சி இல்லாள்கண்...

திருமதி, புலவர், டி. கமலா பி. ஒ. எல்.
தமிழாசிரியை,
சீதாலட்சுமி இராமசாமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி-2.

குறள்-2. மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை
எனைமாட்சித் தாயினும் இல். 52

ஒருவன் வாழ்க்கைக்குத் துணையாய் அமைந்த மனையாளின் நலத்தினை உரைப்பது இக்குறள்.

திருவள்ளுவர் தாம் கூறப் புகுந்த பல செய்திகளை வரையறுத்துக் கூறுவது வழக்கம். அம்முறையில் இக்குறளையும், கூறியுள்ளார். 'இது வேண்டும், இது செய், இது இதுதான், என்று கூறுவது ஒருமுறை; இது இல்லையாயின்இது இல்லை' என்பது ஒருமுறை. இது கடுமையான முறை. அம்முறையில் இக்குறளைத் திருவள்ளுவர் "இல்லறத்திற்குத் தகுந்த நற்குண நற்செய்கை மனைவியிடத்தில் இல்லையாயின் அவ்வில் வாழ்க்கை எவ்வளவு சிறப்புடையதாயினும் பயனில்லை" என்று என்று கூறுமாறு காட்டியுள்ளார்.

இங்கு அவர் பொதுவாக மனைமாட்சி என்று குறித்தது எதனை? எனைமாட்சி என்று குறித்தது எதனை? என்று ஆராய்ந்தால், இல்லறம் நடத்தும் ஒருவன் துணைவிக்கு வேண்டப்படும் 'பண்பு' எது, அப்பண்பு இல்லை என்றால் 'எனைமாட்சி' எவ்வாறு பயனற்றுப்போகும் என்பதைக் காணலாம்.

ஒருவன் செம்மையான இல்லறம் நடத்த, நல்ல நாடு, நல்ல ஆட்சி, நல்ல மனைவி, நல்ல ஏவலர், நல்ல மக்கள் அமைதல் வேண்டும்.

இவையெல்லாம் செம்மையாக அமையின் ஒருவன் இம்மையுலகத்து வாழினும் பேரின்பம் பெற வல்லவனாவான். இவற்றுள் இவை எல்லாம் அமைந்தும் மனைவி செம்மையாக வாய்க்காதுபோனால், மனைவியோடிருந்து ஆற்றும் இல்லறத்திற்குத் துணையான அத்துணைப் பொருள்களும் பீடழிந்து போகும்.

இல்லாளுக்குரிய, மனைக்குரிய மாட்சிகள் எவை எனில், தன்னைக் கற்பால் காத்துப் பழிபடாது புகழுக்குரியவளாய் வாழ்தலாம். கணவன் பண்பறிந்து உண்டி முதலியவற்றால் ஆற்றுவன ஆற்றல், இணைந்த இருவர் பாலும் எம்முறையிலும் பழிபடாது புகழ் நிலைபெறுமாறு காத்தல் ஆகிய குணங்களாகும்.

மேற்குறித்த குணங்களில் ஒன்றால் குறை நிகழினும் மற்றவற்றான் வரும் நிறை பயனற்றுப்போகும். இவை மனையாட்கு வேண்டப்படும் மனைமாட்சிகளாம். இம்மாட்சிகள் மனையாளிடத்து அமையின், இல்லறம் நடத்தும் ஒருவன் பெற்ற மாடு, மனை, மக்கள், செல்வம் பாடு பெறும். இன்றேல், அவை தம் பயனிழக்கும்.

மாட்சியில் (மாட்சி யில்லாத) மனையாள் வாழிடம் பயனிழத்தலினும் பேய் வாழ் இடமாகிக் கேடுறத்தலும் உண்டு. அறவோர், அந்தணர், உறவோர், விருந்தினர் முதலியோர் தோற்றத்தால் 'மனை' என்றெண்ணிப் புகுந்து, ஆண்டுக்கொடுமை நிகழக்காண்பது, "சாந்தகத்து உண்டென்று கருதி ஒருவன் செப்புத் திறந்துபார்த்து, அதில் பாம்பு வாழக் கண்டு துடிதுடித்தது" போன்றாகிவிடும்.

(இதழ் இரண்டில் காண்க)

# இல்லதென்...

திருமதி, தி. சுந்தராம்பாள் எம். ஏ.,
தமிழ்த்துறை,
வே. வ. வன்னியப் பெருமாள் மகளிர் கல்லூரி,
விருதுநகர்.

குறள்-3. இல்லதுஎன் இல்லவள் மாண்புஆனால்; உள்ளதுஎன்
இல்லவள் மாணாக்கடை. 53

சொற்பொருள்:- இல்லவள்-மனைவி; மாண்புஆனால்-மனையறத்துக்குரிய இயல்பு உடையவளாயிருப்பாளானால்; இல்லதுஎன்-(ஒருவனுடைய) வாழ்க்கையில் இல்லாத பொருள் உண்டோ ? (எல்லாப் பொருள்களும் உண்டு) இல்லவள்-மனைவி; மாணாக்கடை-(ஆனால், மனையறத்துக்குரிய) இயல்பு இல்லாத கடையவளாக இருப்பாளேயானால்; உள்ளது என்? (ஒருவனுடைய வாழ்க்கையில்) உள்ள பொருள் யாது?-ஒன்றும் இல்லை.

கருத்துரை:- ஒருவனுடைய மனைவி மனையறத்துக்குரிய இயல்புடையவளாக இருந்தால், அவனுடைய வாழ்க்கையில் இல்லாத பொருள் ஒன்றுமே இல்லை. எல்லாப் பொருளும் உண்டு. மனைவி மனை அறத்துக்குரிய பண்பு இல்லாதவளாக இருப்பாளேயானால், ஒருவனுடைய வாழ்க்கையில் எல்லாப்பொருள்களும் இருந்தாலும் அவற்றால் பயன் இல்லை. ஆகவே, அவன் வாழ்க்கையில் உள்ள பொருள் ஒன்றும் இல்லை.

விளக்கவுரை:- "இல்லாள்" என்று சொல்லப் பெறும் தகுதியுடையவள் யாவள்? இக்குறளில் முதல் அடியில் வரும் "இல்லவள்" என்னும் சொல்,-மாண்புடையவள்மனை அறத்துக்குரிய இயல்புடையவள் என்னும் பொருள் உணர்த்தும். இரண்டாவது அடியில் வரும் "இல்லவள்" என்னும் சொல், மாண்பில்லாத கடையவள் என்னும் பொருள் உணர்த்தும். "இல்லவள்" என்னும் சொல் இருமுறை ஆளப்பட்டுள்ளமை எதனால்? "இல்லவள்" என்ற சொல்லைக் கண்டு ஏமாந்து விடக்கூடாது என்பதையும், மாண்பு உடையவளே "இல்லவள்" என்பதையும் உணர்த்துவதற்காக என்க.

மாண்புடைய இல்லவள் தொகை பெருகப்பெருக வீடும் நாடும் நலனுறும்; மற்றவள் தொகை பெருகப்பெருக வீடும் நாடும் நலன் அழியும். மனையாள் மாண்பே வாழ்க்கையின் நிறைவு. இதுபோன்ற காரணம் பல கொண்டு வள்ளுவர் இல்லவளுடைய மாண்பை வலியுறுத்திக் காட்டுகிறார். ★

# பெண்ணிற் பெருந்தக்க...

கேப்டன்; மிஸ், தி. கி. நாகாம்பாள் எம். ஏ;
நிர்வாக அதிகாரி 3-ஆவது மைசூர் மகளிர் பி. என்; என். சிசி.
பெங்களூர்.

குறள்-4. பெண்ணிற் பெருந்தக்கயாவுள? கற்பு என்னும்
திண்மைஉண் டாகப் பெறின். 54

சொற்பொருள்:- கற்பு என்னும்-கற்பு என்று சொல்லப்படும்; திண்மை-கலங்காத உள்ள நிலைமை; உண்டாகப் பெறின்-(அவளிடத்தே) உண்டாயிருக்கப் பெற்றால்; பெண்ணின் அத்தகு மனையாளைக் காட்டிலும்: பெருந்தக்க-பெருமைப்படத்தக்க, (உயர்வான) பொருட்கள்; யா-எவை; உள இருக்கின்றன? (உலகில்)

கருத்துரை:- உலகில் ஒருவன் பெறும் பேறுகளுள் கற்புடைய இல்லாளைக் காட்டிலும் சிறந்த பேறு வேறு ஒன்று இல்லை.

விளக்கவுரை:- கற்புடைய இல்லாளைப் போல், அறமுதலாகிய இம்மைப் பயன்கள் மூன்றுக்கும் ஏதுவாம் பொருள் வேறு இன்மையால் "யாவுள" என்றார். இதனால் கற்புநலத்தது சிறப்புக் கூறப்பட்டது.

கற்பு:- நேர்மையினின்று வழுவாமையும், வழுவ நேர்ந்தக்கால் வாழாமையும்.

திண்மை:- உள்ளத்தே தோன்றி வேர் ஊன்றியுள்ள வலிமை.

பரிமேலழகர்:- ஒருவனது இல்வாழ்க்கைச் சிறப்புக்கு, கற்பு என்னும் உறுதிநிலை இருக்கப் பெற்ற பெண்ணைவிடப் பெருமையுடைய பொருட்கள் வேறு என்ன இருக்கின்றன? (ஒன்றுமில்லை)

மணக்குடவர்:- பெண் பிறப்புப் போல மேம்பட்டன யாவுள; கற்பாகிய திண்மை உண்டாகப் பெறின்?

பரிதியார்:- ஸ்திரீசாதி என்னும் பெரும் பாவக் கன்னியராயினும், பெண்பிறப்பு தெய்வப் பிறப்பு; அது எது எனில், பெண்ணிடத்தில் பதிவிரதா பாவகம் உண்டாகியிருப்பில் என்றவாறு.

**காலிங்கர்:- இல்வாழ்வானுக்குத் தன் மனையாளிற் பெருந்தன்மையுடையன மற்று யாவை? அவள்பால் கற்பென்னும் திறமை ஒருவழிப்பட உளதாய் நிற்கப் பெறின்.**

**(இதழ் ஆறில் காண்க)**

(இதழ் ஐந்தின் தொடர்ச்சி)

Ren. Drew:- (ஆங்கில மொழி பெயர்ப்பாளர்) What is more excellent than a wife, if she possesses the stability of charity?

**காண்டேகர்:-** பெண்ணின் கற்பு கண்ணாடிப் பாத்திரம் போன்றது. ஆண்மையால் காக்கப்படுவது.

**ஹால்டன்:-** அடக்கம், உண்மை, கற்பு இம் மூன்றும் பெண்களைப் பாதுகாக்கும் தேவதைகள்.

**ஷேக்ஸ்பியர்:-** அழகு பெண்களுக்குப் பெருமை தரும்; அடக்கம் அவர்களுக்கு அளவற்ற மதிப்பைத் தரும்; கற்பு அவர்களை தெய்வமாக்கும்.

**ஹார்க்ரேயிங்:-** பெண்ணின் கள்ளமற்ற உள்ளத்தில், கற்பு என்னும் மாணிக்கத்தைக் காணலாம்.

**சிறுஞ்பசமூலம்:-** கற்புடைய பெண் அமுதம் போன்றவள்.

**சிலப்பதிகாரம்:-** கற்புடைய மகளிரை மண்ணுலக மக்களும், விண்ணுலக தேவரும் போற்றுவர்.

**முது மொழிகள்:-** கற்புடைய மங்கையர் பிறர் மனம் புகார்.

* மங்கையர்க்குக் கற்பிற் சிறந்த அணி மற்று ஒன்றில்லை.
* கற்பின் அழகே கவின் பெறும் அழகு.
* கற்பின் வலியால் ஆண்மையும் வீரமும் ஆளப்படும்.

இவையே யன்றி, தொன்றுதொட்டு கர்ண பரம்பரைச் செய்தியாக செவிவழி வருவனவும், இலக்கியங்கள் எடுத்துக் காட்டும் இலக்கியக் கதைகளும், கற்பிற் சிறந்த பெண்டிர் அதன் வலியால் செயற்கரிய செய்யவல்லவர் என்பதும், ஒருவன் ஊழ்வினைப் பயனால் இம்மை வாழ்க்கையில் பெறும் பொருட்களுள், தாய்க்குப்பின் அடையும் பெறும் பேறு தாரம். அவளும், கற்பின் சிறப்புடையளாயின் அவன் அடையும் மேம்பட்ட பொருள் அவன் வாழ்க்கையில் வேறு ஒன்றில்லை என்பதால், எல்லாம் அடைந்தவனாவான் என்பதும் பெறப்பட்டது. *

---

(இதழ் ஏழின் தொடர்ச்சி)

தின் உயர் நிலையினை எக்காலும் எண்ணி அன்பு பூண்டொழுகும்போது இவள் இல்லறமேயாகின்றாள். இதுவும் ஒரு சிறந்த தவமே. இம்மாதிரி தவம் செய்த பெண்டிரும் தாங்கள் வேண்டியவற்றை வேண்டியவாறே பெறுகின்றனர். இவர்களுடைய வாய்மொழியும் மறைமொழியாகிப் பயன் தந்து விடுகிறது. -என்ற கருத்தினையே பேராசிரியர், தி. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்களும் குறிக்கின்றார்கள்.

—ஆசிரியர்.

# தெய்வந் தொழாஅள்...

திருமதி. அ. சீதாலட்சுமி எம். ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
மவுண்ட் கார்மல் கல்லூரி, பெங்களூர்.

குறள்-5. "தெய்வந் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை." 55

தெய்வத்தைத் தொழாமல் தன் கணவனைத் தொழுது வாழ்பவள் பெய்யென பெருமழை பெய்யும்.

கோவிலுக்குச் சென்று கடவுளை வணங்குதல் என்ற பெயரில் ஊர் வம்பு பேசுவதும், தன் காரியத்தைச் சாதிக்கக் கணவனை வணங்குதலும் இல்லாமல் "அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே," என்ற சான்றோர் கூற்றுப்படி, மனித உருவிலுள்ள கணவனே கண்கண்ட தெய்வமென அவனுக்குச் சேவை செய்வதே சிறந்த பூசையெனக் கருதி அதற்கேற்ற இல்லத்தரசியாகப் பெண் வாழவேண்டும் என்பதே இக்குறட்பாவின் விளக்கமாம்.

இனி, "தொழுது எழுவாள்," என்ற சொல்லினை நோக்கின், உறக்கம் நீங்கிப் பின் கணவனின் பாதத்தினை வணங்குவது அல்ல; துயில் மாறி உணர்வுற்ற காலை கற்புடைப் பெண்ணின் மனதில் காணக் கிடப்பது கணவனின் உருவமேயாம். அந்த நிலையில் கணவனை மனதால் தொழுது பிறகு எழுபவள் "பெய்," என்றால் மழை பெய்யலாம்.

எவ்வளவுதான் செல்வம் பெறினும் தலைவன்மேல் குறை சொல்லி வாழும் பெண்களே உலகில் பலர். முதலில் அன்பு மீதூறி, காதலால், தனக்குத் துணைவனாகப்பெற்ற தலைவனுடன் வாழ்க்கை மேற்கொண்ட போது, இடருற்றால், உள்ளம் மாறுபடாது. தானும் அவனோடு உடனிருந்து துய்த்து, மன உறுதியோடு, அறவாழ்வால்-அன்பால் நல்வாழ்வு நடாத்துவதே கற்பாகும் அத்தகைய மனநிறைவு பெற்றவளுக்கு வேறு நினைவு வராது. வாழ்க்கைச்சகடம் சரிவர நடக்கவே துணைவனோடு ஒன்றி வாழ்வாள்; தெய்வத்தைத் தொழும் நினைவு பெறாள்; கடமையைச் செய்யும் அவளை உலகம் போற்றும்; அவள் கருத்துப்படி உலகம் நடைபெறும்: என்பதைத்தான் மேற்கூறிய குறளால் விளக்கிய வள்ளுவப் பெருந்தகை, "பெண்ணிற் பெருந்தக்க யாவுள!" என வியக்கிறார். *

---

குறிப்பு:- "தற்காத்துத் தற்கொண்டான் பேணித், தகைசான்ற
சொற்காத்துச் சோர்வுஇலாள் பெண்."

என்ற குறளில் வரும் 'சோர்விலாள்' என்பதன் விளக்கமே இக் குறளாகும்; சொல்லும் செயலும் மனத்தின் வழிப்பட்டன ஆதலின், இல்லறத்

(இதழ் ஆறில் காண்க)

# தற்காத்து...

குமாரி. க. கமருன்னிசா எம். ஏ., பி. டி.
தமிழ்த்துறை,
லோகநாராயணசாமி அரசினர்க் கல்லூரி,
பொன்னேரி. (செங்கை மாவட்டம்)

குறள்-6. "தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்." 56

பொருள்:- தற்காத்து-கற்பினின்று வழுவாமல் தன்னைக் காத்துக் கொண்டு;தற்கொண்டான் பேணி தன்னைக்கொண்ட தன் கணவனையும் பாதுகாத்து; தகைசான்ற-பெருமை மிகுந்த; சொற்காத்து-சொல் உண்டாகும்படி புகழ் நீங்காது காத்து; சோர்வு இலாள் பெண்-இம்மூன்றின் கண்ணும் எஞ்ஞான்றும் சோர்வுபாடில்லாதவளே இல்லக் கிழத்தி யாவாள்.

விளக்கம்:- மாசிலாக் கற்புடைய மாதரை 'வான்தரும் கற்பினர்', என மணிமேகலை சிறப்பிக்கிறது. இத்தகு குலமகளிர் எத்தகு இடுக்கண் நேர்ந்தாலும் நிறைகாத்து, தனக்கும், தன் குலத்திற்கும், தன் கணவனுக்கும் புகழ் ஈட்டிப் பெருமையடைவர். தற்காத்து வாழும் மகளிரின் செப்பரிய சிறப்பினை,

'கன்னிக் காவலும் கடியிற் காவலும்
தன்னுறு கணவன் சாவுறில் காவலும்
நிறையிற் காத்துப் பிறர்பிறர்க் காணாது
கொண்டோன் அல்லது தெய்வமும் பேணாப் பெண்டிர்"

என மணிமேகலையடிகளில் சித்திராபதி போற்றுதலைக் காணலாம். எக்காலத்திலும் எந்நிலையிலும் நெறிதிரியாப் பெண்டிரே நல்வாழ்க்கைக்கு ஈடில்லாத் துணையாவார் என்பதே ஆசிரியர்தம் கருத்து.

'தற்கொண்டான், பேணி' என்னும் பதங்கள் மனைவியின் உரிமையையும், கடமையையும் நினைவு படுத்துகின்றன. 'தற்கொண்டான்' எனக் கூறுங்கால்,இல்லக் கிழத்தி,கணவன் தன் ஒருத்திக்கே உரிமையானவன்;வேறு ஒருவரும் அவன்பால் உரிமை கொண்டாடுதற்கு ஏற்றவரல்லர் என்பதனைச் சுட்டுகிறது. 'பேணி' என்பது, மனையாள் கணவனின் உண்டி, உடுப்பு மற்றும் பிறவற்றுள் அவன் விருப்பு, வெறுப்புக்கேற்ற செயல் படுபவளாகவும், இருவருக்கும் பழிதரும் சொல்லை நீக்கிப் பாதுகாப்பவளாகவும் இருத்தல் வேண்டுமெனக் குறிப்பிடுகிறது. மேலும்,

(இதழ் ஒன்பதில் காண்க)

# சிறை காக்கும்...

திருவாட்டி. மேரி-மாசிலாமணி அம்மையார் எம். ஏ , எல். டி.
தலைமைத் தமிழாசிரியை.
மகளிர் கிறித்துவக் கல்லூரி. சென்னை-6

குறள்-7. **"சிறைகாக்குங் காப்பெவன் செய்யும் மகளிர்
நிறைகாக்குங் காப்பே தலை."** 57

**பதப்பொருள்:-** மகளிர்-பெண்களை; சிறை காக்கும்-சிறை செய்து காக்கும்;காப்பு-காவலானது; எவன் செய்யும்-என்ன பலனை அளிக்கும்; நிறை-(பெண்கள் தமது)நிறை என்னும் கற்பால்; காக்கும்-(தம்மை) காத்துக்கொள்ளும்; காப்பே-காவலே; தலை-மிகச்சிறந்த காவலாகும்.

**கருத்து:-** எந்த விதமான காவலை வைத்து ஒரு பெண்ணின் கற்பைப் பாதுகாத்தாலும், அவளுடைய நெஞ்சில் கற்பை நிலை நிறுத்த உதவும் உறுதியும், கோட்பாடும் இல்லையேல், புறக்காவலால் பலனில்லை என்பதும், நெஞ்சில் கற்பாகிய காவல் கொண்ட பெண்ணுக்கு, எவ்விதம் புறக் காவலும் வேண்டா என்பதும் கூறப்பட்டது.

(இதழ் பத்தில் காண்க)

---

(இதழ் எட்டின் தொடர்ச்சி)

"அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்"

கணவனைப் பேணுவதின் பாற்படும். இதனாலன்றோ, இலங்கை மாநகரில் சிறையிருந்த சீதை தற்கொண்டானைப் பேண முடியாது தவித்த நிலையை,

"அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என்று அழுங்கும்
விருந்து கண்டபோது என்னுறுமோ என்று விம்மும்;"

எனக் கூறிக் கணவனையும் விருந்தினரையும் பேணும் கடமை உடையாள் பெண்என உணர்த்தினர் கம்பர்.

இருவர் மாட்டும் நன்மை யமைந்த புகழ் நீங்காது காத்தலைத்தான் 'தகைசான்ற சொற்காத்து' என்பர் வள்ளுவர். மனையாள் தன் கணவன் பால் குறை நீங்கி நிறைவு கண்டு அவனைப் போற்றுபவளாகவும் குடும்ப இரகசியங்களையும், தமக்குள் ஏற்படும் சிறு பிணக்கு, பூசல், ஊடல் முதலியனவற்றையும் வெளிக்கூறாதவளாயும்,குலமகளுக்கே ஏற்பட்ட அடக்கமும் பண்பும் மிகுந்த சொற்களைக் கொண்டவளாகவும் இருத்தல் வேண்டுமென்பதே இதன் உட்கருத்தாம்.

மேற்கூறிய மூவிடத்தும் சோர்வின்றி மனநிறைவோடு வாழ்க்கை நடத்தும் பெண்ணே சிறந்த வாழ்க்கைத் துணையாவாள்.*

(இதழ் ஒன்பதின் தொடர்ச்சி)

**குறிப்பு:-** சிறை-பெண்களையுடையார் அவர்களை வீட்டிற்குள் வைத்துக் காத்தலும், வாசலில் காவலர் வைத்துக்காத்தலுமாகிய புறக் காவல்; நிறை-மகளிர் தமது நெஞ்சைக் கற்பு நெறியில் நிறுத்திக் காத்துக் கொள்தலாகிய அகக்காவல்; 'சிறை காக்கும்', நிறை காக்கும்' என்னும் தொடர்கள், சிறையில் காக்கும், நிறையில் காக்கும் என விரிதலால் மூன்றும் வேற்றுமைத் தொகை என்க. சிறைக்காவலைப் பிரித்தலால், 'காப்பே' என்பதில் ஏகாரம் பிரி நிலைக்கண் வந்தது; காப்பு-பு விகுதி பெற்ற தொழிற் பெயர்,

**விளக்கம்:-** பெண்களை வீட்டில் பூட்டிவைக்கும் வழக்கம் இக் காலத்தில் ஒருவாறு ஒழிந்து போனது குறித்து,

வீட்டுக் குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற
விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்'

என்று கூறி சுப்ரமணிய பாரதி மகிழ்ச்சி யுறுவதையும், அவரே நிறையாகிய காவலைக் கொண்ட பெண்டிர், முறைதவறி நடப்பதில்லை என்பது குறித்து,

'நிமிர்ந்த நல்நடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்'

என்று எடுத்துக் கூறுவதையும் ஒப்பிட்டுக் காண்க.

ஒருவன் தவறான வழியில் செல்லாதிருக்க, மனத்தில் மாசில்லாமையே முதலில் வேண்டும் என்பதை, வள்ளுவரும்

"மனத்துக் கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற."

என்று கூறி வற்புறுத்துகிறார்.

ஆங்கிலப் புலவர் **ஜான் மில்டன்** என்பார்,

"The mind is its own place, and in itself
Can make a Heaven of Hell or a Hell of Heaven"

என்னும் அடிகளில், உள்ளத்தில் பண்பாடு வேண்டுமென்பதையே உணர்த்தியுள்ளமை, இங்கு நோக்கற் பாலது.

**ஆங்கிலமொழிபெயர்ப்பு:-**

"Of what use is one's watch and ward.,
Her Chastity is her only shield." ✱

# பெற்ருன் பெறின்...

திருமதி. தரணி பாஸ்கர். எம். ஏ;
தமிழ் விரிவுரையாளர்,
பி. எஸ். ஜி. ஆர். கிருட்டினம்மாள் மகளிர் கல்லூரி,
கோவை.

குறள்-8. "பெற்ருன் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழுமுலகு." 58

பொருள்:- பெண்டிர் பெருஞ் சிறப்புப் பெறின்-(பெட்பு நலங் கொண்ட) மகளிர் (உரிமையும் பெருமையும் மிக்க) இல்லறத்திற்குரிய பெருஞ் சிறப்புகளைப் பெறுவாராயின்; பெற்ருன் புத்தேளிர் வாழும் உலகு பெறுவர்-(அத்தகைய பெண்டிரைத்) துணைநலமாகப் பெற்ரோர் துறக்க (சுவர்க்க) உலகினர் வாழும் அவ்வுலகப் பேற்றை (இவ்வுலகில் இல்லறத்தின் வாயிலாகப்)பெறுவர்.

விரிவுரை:- வாழ்க்கைத் துணைநலமாக அமைந்தவள் மாண்பு மிக்கவளானல், இந்த உலகிலேயே பெறுதற்கு அரியது எதுவுமே இல்லை', என இவ்வதிகாரத்தின் மூன்ருவது குறளில் பொதுவாகக் கூறியதைப் 'புத்தேளிர் வாழும் உலகு' என இக்குறளில் குறிப்பிட்டுச் சுட்டுகிருர் ஆசிரியர். வையத்துள் வாழ்வாங்கு வாழ்வோனே தெய்வத் துள் வைக்கப் படு மாதலின், வாழ்வாங்கு வாழும் முறை பெண்டிர்க்குப் பெருஞ் சிறப்புப்பெற வைப்பதேயாம். இதே கருத்தினைத் தெளிவுமிகப் 'புகழ் புரிந்த இல்லாள்' என்றும், அவளைத் துணைநலமாகப் பெற்ற வனுக்கே, 'இகழ்வார்முன் ஏறுபோற் பீடுநடை' இருக்க முடியும் எனவும் கூறிஞர். ஆதலின், மகளிர் சிறப்புப் பெற்ருலன்றிக் கணவர் சிறப்புப் பெற இயலாதென்பது தேற்றம்.

'பெற்ருன்', எனில், இல் வாழ்க்கை நடத்தற்குரிய பண்புகளைப் பெற்றவன்' எனப் பொருள்கொண்டு, அத்தகையவனைக் கணவனுகப் பெற்ருல், மகளிர் ஒன்றிய வாழ்க்கையறம் நடாத்தி, அதன் பயனுகப் புத்தேளிர் வாழும் உலகினைப் பெறுவர்' என்ற கருத்தும் நோக்கத் தக்கது. *

---

[இதழ் பனிரெண்டின் தொடர்ச்சி]

இல்லறம் நல்லறமாவதும், கணவன் பீடுபெற நிற்பதும் மனைவி யின் சிறப்பால், நல்ல பண்பினுல் ஏற்படுகின்றவொன்று எனப் பாடல் கூறுகிறது. எவ்வளவு சிறப்பு இருப்பினும் மனைவியிடம் நல்இயல்பு இல்லாவிடின் வாழ்க்கை கெடுவதுடன், கணவனும் பகைவர்முன் தலை தாழ்ந்தே செல்லநேரும்.

கணவனுக்கு வரும் புகழுக்கும் இகழுக்கும் மனைவியே பொறுப் பாவாள். ஆகவே, அவள் சிறந்தவளாக இருத்தல் வேண்டும். *

# புகழ்புரிந்த...

திருவாட்டி. இரா. சிவானந்தவல்லி. எம் ஏ.,
தமிழ்ப் பேராசிரியர்,
நிர்மலா மகளிர் கல்லூரி. கோயம்புத்தூர்.

குறள்-9. "புகழ்புரிந்த இல்லிலோர்க்கு இல்லை இகழ்வார்முன்
ஏறுபோல் பீடு நடை." 59

**சொற்பொருள்:-** புகழ்புரிந்த=புகழைக் காக்கவேண்டுமென்று விரும்புகின்ற; இல்=மனைவியை; இல்லோர்க்கு=பெறுதவர்களுக்கு; இகழ்வார்முன்=தம்மைப் பழித்துப் பேசும் பகைவரின்முன்; ஏறு போல்=ஆண்சிங்கம்போல்; (நடக்கும்) பீடுநடை=பெருமிதமான நடை; இல்=இல்லை.

**கருத்து:-** புகழை விரும்பும் மனைவியை அடையாதவர்க்கு தம்மைப் பழித்துரைக்கும் பகைவர்முன் ஆண்சிங்கம்போல் நடக்கும் பெருமித நடையில்லை.

**விளக்கம்:-** இல்லறம் சிறப்புறுவது பெண்களாலேயேயாகும். ஆகவேதான், மனைவிமாண்புடையவளாயிருக்க வேண்டும்என வள்ளுவர் கூறுவர். மனைவி தன் நிறைகாக்கவேண்டும். தன் கணவனைப் பேண வேண்டும். இவற்றிலும் மேலாக தன்னிடத்தும் தன் கணவனிடத்தும் புகழுண்டாக்கும் சொற்களை உண்டாக்க வேண்டும். இப்படிப்பட்ட பெண்ணால் இல்லறம் சிறப்படையும். கணவனும் என் மனைவி நல்ல மனைவி எனப் பெருமை கொள்வான். இதைத்தான் "பானை பிடித்தவள் பாக்யம்"என வழக்கில் கூறுகின்றனர்.வாழ்வு சிறக்க,வளம்பெறத்தக்க மனைவியைப் பெறுதவன் 'துறவு கொள்க' என்றுதானே ஔவைப் பாட்டி கூறுகிறாள்.

நல்ல இல்லறம் நாட்டிக் கணவருக்கும் பெருமை தேடித்தந்த மகளிர் இலக்கியத்தில் பலர். மனைவிக்காம் மகளிர்,கணவர் புகழ் காக்கும் இயல் பினர். ஒரு தலைமகன் தன்னூர்ப் பெருந் தெருவழியே செல்கின்றான்;அப் போது அவனைக் கண்ட மகளிர் "இவன் நம்மூர் நல்லோளின் கணவன்" எனச் சுட்டிக் காட்டுகின்றனர்; அதுகேட்டு அவன் நாணினான் எனி னும், 'மனைவி நல்லோள்' எனும் கூற்று அவனுக்குப் பெருமகிழ்ச்சியை யும், பெருமையையும் தந்தது. மேலும், பிசிராந்தையார் (எனும் புலவர்) தாம் நரை நீங்கி வாழ்தற்குக் கூறும் காரணங்கள் பலவற்றுள் ஒன்றாக மனைவியின் நல்இயல்பினால் கவலையிலிருந்து விடுபட்டு வாழும் வாழ்க் கையையும் குறிப்பிடுகிறார்.

[இதழ் பதினென்றில் காண்க]

# மங்கலம் என்ப...

திருமதி. கனகசவுந்தரி இளந்திரையன். எம். ஏ; எம். லிட்.,
தமிழ்த்துறை,
ஸ்ரீ வேங்கடேஸ்வராக் கல்லூரி, புதுதில்லி

**குறள் 10.** "மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு." 60

பொருள்:- மங்கலம் என்ப மனைமாட்சி-இல்வாழ்வுக்குப் பெருமை தருவன மனைவியின் நற்குண நற்செய்கைகள் (அதாவது, இல்லறத்துக்கு வேண்டிய நல் இயல்புகளை மனைவி பெற்றிருப்பதால் இல்லறம் சிறப்படையும்) என்று பெரியோர் சொல்வார்கள். நன்மக்கட்பேறு அதன் நன்கலம்-அவ் இல்வாழ்வின் பெருமைக்கே அழகாக அமைவது நல்ல மக்களைப் பெறுதல் (என்றும் சொல்லுவார்கள்.)

**கருத்துரை:- நல்ல மனைவியால் ஒருவனின் இல்லறம் சிறப்படைகிறது; அவன் நல்ல மக்களைப் பெறுவதால் அது மேலும் சிறப்படைகிறது என்பது இதன் கருத்து.**

விளக்கஉரை:- இப்பாடலின் முதற்பகுதி, ஒருவன் தனக்கு உகந்த நல்ல மனைவியைத் தேடிக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறது; பிற்பகுதி, தாங்கள் பெறும் குழந்தைகளை நல்லவர்களாக வளர்த்து ஆளாக்க வேண்டும் என்கிறது. "மனைவியின் சிறப்பே மனிதனின் சிறப்பு" என்பது தமிழ்க் கொள்கை. அதுபோல், "மக்களின் சிறப்பே பெற்றோர்க்குச் சிறப்பு" என்பதும் தமிழ்க்கொள்கை.

இப்பாடலில் சொற்களை நன்கு தேர்ந்தெடுத்துக் கையாண்டுள்ளார் வள்ளுவர். "நன்கலம் மக்கட்பேறு" என்று சொல்லாமல் "நன்கலம் நன் மக்கட்பேறு"என்று குறித்ததே இப்பாடலின் தனிச்சிறப்பு.பிள்ளைகளைப் பெற்று விடுவதிலேயே ஓர் இன்பம் உண்டு. அவ் இன்பம் அவர்களின் மழலையைக் கேட்பதாலும், அவர்களை அள்ளி அணைப்பதாலும் அவர்கள் சிறுகையால் அளாவிய கூழை உண்பதாலும், மற்றும்

'குறுகுறு நடந்து சிறுகை நீட்டி,
இட்டும் தொட்டும் கவ்வியும் துழந்தும்
நெய்யுடை அடிசில் மெய்பட விதிர்த்தும்"

நிற்பதைக் கான்பதாலும் ஏற்படுவது. இவ் இன்பம் நிலையானதன்று. இம்மக்கள் நல்லவராய், அறிவுடைய நன்மக்களைப் பெறுதலே இல்வாழ்க்கைக்கு அழகு என்பது இப்பாடலின் பிற்பகுதி தரும் கருத்து.

இதில்வரும் 'பேறு' என்னும் சொல் மகப்பேற்றைக் குறிக்கவில்லை. 'வாய்ப்பது'என்பதே இங்கே இச்சொல்லின் பொருள். அதாவது,தங்கள் மக்களை அறிவுடையராய் அவையத்து முந்தியோராய் வளரச் செய்வது பெற்றோரின் கடமை என்பது கருத்து... **வாழ்க்கை இப்படி இப்படி இருக்கிறது என்பதும், இப்படி இப்படி இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டுவதும் வள்ளுவத்தின் இயல்புகள், என்பதை இங்கே** சிந்தித்து உணரவேண்டும். *

# தமிழ் அன்னை உங்களை வேண்டுகிருள்.

தமிழரின் தேடக் கிடக்காத செல்வம் திருக்குறள். அதன் மணம் பரப்பும் அரிய பணியைச் செய்து வரு கிறது 'குறள் மலர்' தமிழ் மொழிப் பற்றும், தமிழ் நெறி யில் பற்றும் உள்ளோர் தாமாக முன்வந்து 'குறள் மலர், வளம்பெற உதவவேண்டும்.

'குறள் மலர்' புரியும் அரிய பணியைப் பாராட்டி வாழ்த்துக் கூறுவோர் பலர். அவர்களுக்கு எமது நன்றி. எனினும் வெறும் வாழ்த்துதல் மட்டும் போதாது; செய லில் ஆதரவு தந்து உதவவும் வேண்டும்.

திங்கள் ஒன்றுக்கு ஒரு ரூபாய் தந்து. ஐந்து மலர் களைப் பெற்று உங்கள் நண்பர்களிடம் மலரைப் பரப்புங் கள். இது பெரிய அறம்; தமிழன்னைக்கு நீங்கள் செய்யும் திருப்பணி; தெய்வப்பணியும் ஆகும்.

இவ்வாறு செய்ய மனமிருந்தும். உங்கள் பொரு ளாதாரம் இதற்கு இடந்தராவிடில், உங்களுக்குமட்டும் திங்கள்தோறும் ஒரே 'குறள் மல'ரைப் பெற்று ஆதரியுங் கள். அஞ்சல் செலவு உட்பட நீங்கள் ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் **3**, முன்பணம் செலுத்திஞல் போதும்; மலர் உங் களைத் தேடிவரும்.

தமிழர்கள் என்போர், தமிழ்ப்பற்று உடையோம் என்போர். தமிழர் வாழ்வு சிறக்கப் பணிபுரிகிருேம் என் போர். மனமுவந்து முன்வந்து 'குறள் மலருக்கு ஆதரவு தந்தருளுதல் வேண்டும்; தங்கள் நண்பர்களின் ஆதரவை யும் தேடித்தந்து இப்பெரும் பணியில் தங்களின் நல் ஆதரவைச் செயல் மூலம் தந்தருளப் பணிவன்புடன் வேண்டுகின்றோம். இதைத் **தமிழ் அன்னையின்** வேண்டு கோளாக மதியுங்கள்.

இங்ஙனம்,

பதிப்பாசிரியர், **'குறள் மலர்'**

இராபர்ட்சன் பேட்டை,

கோலார் தங்கவயல். (மைசூர் மாநிலம்)

செந்தமிழும், திருக்குறளும் சேர்ந்திலங்கப் புகழ்ச் சொற்

பெருக்காற்றித் தமிழ்மறை பரப்பும் செம்மல்,

'குறள் மலர்' ஆசிரியர்,

# திரு. அ. இரத்தினசபாபதி

அவர்களுக்கு

**கோலார் தங்கவயல், நந்திதுருகம், மில் பிளாக்-சைனட்**

**லைன் மக்கள், பஞ்சாயத்து, சிவசுப்பிரமணிய**

**சுவாமி ஆலயம்,**

ஆகியவற்றின் சார்பில், கார்த்திகைத் தீப பிரம்மோற்சவத்

துவக்க நாளான

**28-11-1965** அன்று;

ஆலய விழாப் பந்தலில், விழாத் தலைவர்

## திரு. வி. எம். சுந்தரராசன்,

எம். ஏ., எம். எஸ். ஸி. (லண்) எம் ஐ. எம். எம்.

(சூப்பரின்டெண்டு நந்திதுருகம் மைன்ஸ்)

**அவர்களால்**

''திருக்குறள்மணி, நாவலர்''

**என்ற சிறப்புப் பட்டம் வழங்கப்பட்டு பொன்னாடை**

**போர்த்தப்பட்டது.**

**V. M. SUNDARARAJAN**

விழாத் தலைவர்.